இருக்கிறது, சொல்கிறார்கள். ஆனால், அவர் அறிவித்துவிட்ட பிறகு, மறுபடி ஒவ்வொரு அமைச்சராக எழுந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதையே சொல்லி, active voice-ல் சொன்னதை passive voice-ல் சொல்லி, இவ்வாறு நேரத்தை consume செய்வது நியாயம்தானா என்று கேட்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னால், சொன்னதுதான். அதை ஏற்றுக்கொள்கிறோம். அதற்குப் பிறகும், ஒவ்வொருவராக எழுந்து நன்றி தெரிவிக்கிறேன், நன்றி தெரிவிக்கிறேன் என்று சொல்லி, எவ்வளவு நேரம் ஆகின்றது என்று பாருங்கள். (குறுக்கீடு) இதைக் குறைக்கலாம் என்றுதான் சொல்கிறேன்.

முற்பகல் 11-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, துறையினுடைய அமைச்சர்கள். . . (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உட்காருங்கள். நான் சொல்கிறேன், உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் துறைக்கு அறிவிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிவிப்புகளுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் நன்றி சொல்கிறார்கள். (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: நன்றி சொல்லட்டும், தங்களுடைய துறைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவ்வளவு கோடி நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். எனவே, நன்றி இருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அதை பார்த்துக்கொள்ளலாம்.

4. விழுப்புரம் மாவட்டம், பெரவளூர் கிராமம், நீட் தேர்வில் தோல்வியடைந்ததால் உயிரிழந்த மாணவி பிரதிபா குடும்பத்திற்கு நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் வட்டம், பெரவளூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சண்முகம் என்பவரின் மகள் செல்வி பிரதிபா என்பவர் ‘நீட்’ தேர்வில் குறைவான மதிப்பெண் எடுத்ததன் காரணமாக,

மனமுடைந்த நிலையில் 4-6-2018 அன்று இரவு தற்கொலை செய்துகொண்டு உயிரிழந்தார் என்ற செய்தியறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன். உயிரிழந்த செல்வி பிரதிபா அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன். உயிரிழந்த செல்வி பிரதிபா அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 7 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியில் செயல்படும் இந்த அரசு மாணவர்களின் நலனில் எப்போதும் அக்கறையோடும், அவர்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் இருக்கும் என்பதையும், மாணவமணிகள் இதுபோன்ற விபரீத முடிவுகளைத் தவிர்க்க வேண்டும் என்பதையும் இத்தருணத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், உங்களைத்தான் அழைக்க வேண்டுமென்று இருந்தேன். சொல்லுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீட்' தேர்விலே குறைந்த மதிப்பெண் எடுத்ததால் தற்கொலை செய்துகொண்டு மாண்டிருக்கக்கூடிய செல்வி பிரதிபா அவர்களுடைய குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 7 இலட்சம் ரூபாய் நிவாரணம் அறிவித்திருக்கிறார்கள். நேற்றைய தினம் நானும் நேரடியாகச் சென்று இறுதி அஞ்சலி செலுத்தி, அந்தக் குடும்பத்திற்கு ஆறுதல் சொல்லிவிட்டு வந்தேன். அந்தக் குடும்பம், வறுமையிலே சிக்கி தவித்துக் கொண்டிருக்கக்கூடிய குடும்பம். கூலி வேலை செய்துதான் அந்தக் குடும்பத்தை அவரது பெற்றோர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தற்கொலை செய்துகொண்டு மாண்டுபோன செல்வி பிரதிபாவுடைய சகோதரர் பொறியியல் கல்லூரியில் மூன்றாம் ஆண்டிலும், அவருடைய சகோதரி MCA பட்டப் படிப்பும் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கூலி வேலை செய்துகொண்டு கடன் வாங்கி தங்களுடைய குழந்தைகளைப் படிக்க வைத்துக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலை உள்ளது. எனவே, இந்தச் சூழ்நிலையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிவாரண நிதியை இங்கே அறிவித்திருக்கிறார்கள், வரவேற்கிறேன். ஆனால், அதேநேரத்தில் அந்தக் குடும்பத்திலே ஒருவருக்கு அரசு வேலைவாய்ப்பை உருவாக்கித் தரக்கூடிய ஒரு சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்தித் தருமா என்பதையும் தங்கள் மூலமாக நான் கேட்டு, அமர்கிறேன்.